**கவனிக்க** .- 2025.04.04ஆந் திகதிய 2431 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க** .- இவ்வாரம் வெளியாகும் வர்த்தமானியின் பகுதி VI இல் 2025ஆம் ஆண்டுக்கான காலி மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2432 - 2025 අප්‍රේල් මස 11 වැනි සිකුරාදා - 2025.04.11
2432ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II ஆ) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 416 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 418 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 419 |
| உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 422 |
| அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025,மே மாதம் 02ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஏப்பிறல் மாதம் 17ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கே.ஜீ. பிரதீப் புஸ்ப குமார,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## விவசாயம், நீர்ப்பாசனம் , நிலங்கள் மற்றும் கால்நடை அமைச்சு

### நில அளவைத் திணைக்களம்

### கேள்விமனு அறிவித்தல்

பிராந்திய ஆய்வு அலுவலகங்களுக்கான கட்டிடங்களின் வாடகை- 2025

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களிற்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2025.04.28 ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி.ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| வட மத்திய மாகாணம் | பொலன்னறுவை | ஹிகுரக்கொட | மாகாண சர்வேயர் ஜெனரல் (வடமத்திய மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம், அநுராதபுரம் | ஹிங்குராக்கொடையைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.07.01 |
| வட மாகாணம் | மன்னார் | மன்னார் | மாகாண சர்வேயர் ஜெனரல் (வட மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம், வவுனியா | மன்னாரைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.06.01 |
| மத்திய மாகாணம் | கண்டி | கண்டி | மாகாண சர்வேயர் ஜெனரல் (மத்திய மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம், கன்னொருவை, பேராதனை | கண்டியைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.08.01 |
| மத்திய மாகாணம் | கண்டி | மினிபே | மாகாண சர்வேயர் ஜெனரல் (மத்திய மாகாணம்). மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம், கன்னொருவை, பேராதனை | மினிப்பேயைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.06.01 |

**பூரணப்படுத்தப்படவேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்:**

அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருந்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவிற்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்கு செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இட வசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீ ழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையில் இடது பக்க மேல் மலையில் “பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் ( இடத்தின் பெயர்)” எனக் குறிப்பிட்டு 2025.04.28ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

வை.ஜீ. ஞானதிலக்க,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு -05.
2025.04.07.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்-2025**

**விலைமனுக்கோரல் விண்ணப்பப்படிவம்- 2025**

**கட்டிட உரிமையாளருக்காக:**

01. முழுப் பெயர்: ................
02. முகவரி: ................
03. தொலைபேசி இலக்கம்: ................
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ................

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்தப் பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது: ................
02. மாதாந்த வாடகைத் தொகை: ................
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி : ................
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி.மீ : ................
05. இடத்தின் விஸ்தீரணம்: ................
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள்: ................
07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா: ...............
08. தனியாக அவதானிக்கக் கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா: ................
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் ( மதில்/ கம்பி/ வேலி): ................
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை: ................
11. ரஹான் தொலைபேசி தொடர்பு உள்ளதா: ................

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையாளவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரிய வரும் பட்சத்தில், என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு, நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.

.....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

04- 109

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - களுவாஞ்சிக்குடி

### பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், அரசுடமையாக்கப்பட்டதுமான பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2025.04.26 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்ற பதிவாளரின் முன்னனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.30 மணிமுதல் 9. 30 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஜே.பி.ஏ. றஞ்சித்குமார்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
களுவாஞ்சிக்குடி,
2025.04.01.

**ஏலவிற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்களின் விபரம்**

| *இல.* | *சான்றுப்பொருட்களின் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|
| 1. | மின்பிறப்பாக்கி | 01 |
| 2. | துளைகருவி இயந்திரம் | 01 |
| 3. | கையடக்கத் தொலைபேசி | 01 |
| 4. | அலவாங்கு | 02 |
| 5. | மண்வெட்டி | 01 |
| 6. | சுத்தியல் | 01 |
| 7. | பிக்காஸ் | 01 |
| 8. | சிலிண்டர் | 05 |
| 9. | பெரியபானை | 09 |
| 10. | இரும்பு வாளி | 13 |
| 11. | அலுமினியச் சட்டி | 15 |
| 12. | சவள் | 05 |
| 13. | மின்கலம் 12 V | 01 |
| 14. | ஆற்றுமண் | 06 1/2 கியுப் |
| 15. | வயல்மண் | 06 கியுப் |
| 16. | அடுப்பு | 01 |
| 17. | மேசைத் தராசு | 01 |
| 18. | இலத்திரனியல் தராசு | 03 |

04- 123

# ஆயவிற்பனையும் குத்தகையும்

## 2025 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2026 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை 2025/ 2026

### மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவு

2025 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2026 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கள்ளு சில்லறை விற்பனைக்காக 1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆந் திகதி இல. 207 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான கள்ளு குத்தகை விற்கும் நிபந்தனைகளுக்கு அமைவாக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடும் கள்ளு தவறணைக்களுக்கான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் பிரதேச செயலாளர் அலுவலகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாதிரி கேள்விப்பத்திரமொன்றில் தயார் செய்யப்பட வேண்டியுள்ளதுடன் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்பிலிட்டமைக்கான பற்றுச்சீட்டும் கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டும். விலையில் 15% க்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. முறையாக நிரப்பப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் சீல் வைக்கப்பட்டு அதன் இடது பக்க மூலையில் "இல .......... கள்ளுத் தவறணைகளுக்கான கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட்டு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கள்ளுத்தவறணைக்கான பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2025.05.19 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லாதவிடத்து அக்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பதற்கு 1982.08.20 ஆந் திகதி வெளியிடப்பட்ட இல. 207 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கள்ளு நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

5. 2025.05.19 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்ததும் கேள்விப்பத்திரங்கள் உடனே திறக்கப்படும் அச்சந்தர்ப்பத்தில் கேள்விப்பத்திரங்கள் முன்வைத்த அனைவரும் மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருக்க வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதிக்கு விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணைகள் குத்தகை மீண்டும் விற்றல் 2025.06.16 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும். அத்திகதிக்கு கேள்விப்பத்திரங்கள் முன்வைப்பது மேற்குறிப்பிட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்களை மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொ.இ.(0322254231, 0322252061).

பீ. டபிள்யூ.எம். எம்.என். பண்டார,
பிரதேச செயலாளர்,
மஹவெவ.

பிரதேச செயலகம்,
மஹவெவ,
2025.03.20.

**அட்டவணை**

| *தவறணையின் இல.* | *கிராமம்* | *வைப்புப் பணம் ரூபா* |
|---|---|---|
| 16 | அடப்பரகம | ரூ. 500.00 |
| 17 | மட்டாகொடுவ | ரூ. 500.00 |
| 18 | தொடுவாவ வடக்கு | ரூ.1000.00 |

04- 71

## கள்ளுத்தவறணை குத்தகையும் விற்பனையும் - 2025/ 2026

## முந்தல் பிரதேச செயலகப் பிரிவு- புத்தளம் மாவட்டம்

2025, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2026, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் கீழ் வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவாறான கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை நிபந்தனைகளுக்கமைவாகவும் மற்றும் சகல கலால் அனுமதிப்பத்திரங்களுக்கமைவான நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையிலும் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான குத்தகை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப் படிவங்களில் கேள்விகளை சமர்ப்பிப்பதுடன், கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகை பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியான ஆதன பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3.கேள்விப்பத்திரங்கள் முறையாக முத்திரையிடப்பட்ட உறையிலிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் கள்ளுத் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு ..........................கள்ளுத்தவறணைக்குரிய ................................. இலக்க கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடல் வேண்டும். கள்ளுத்தவறைணை கேள்விப்பத்திரம் 2025.05.20 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக முந்தல் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தாபலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்துக்குள் முந்தல் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியில் இடப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2025.05.20 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப் பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப் பத்திர கோரிக்கையாளர்கள் முந்தல் பிரதேச செயலகத்துக்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. முன்னர் குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய முடியாது போன கள்ளுத் தவறணைகள் 2025.06.17 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அத்தினத்திற்கு கேள்விப்பத்திரங்கள் முன்வைத்தல் முன்னர் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசி இலக்கம் (032-2052271).

எம்.எஸ்.பீ.டப்.டீ.எம்.எஸ்.பீ. மல்வில,
பிரதேச செயலாளர்,
முந்தல்.

2025.04.01.

**அட்டவணை**

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| முந்தல் | 01. மதுரங்குளி | காலை 10.00<br>பி.ப. 9.00 | மு.ப. 10.30 மணி<br>2025.05.20 | 1000.00 |
| முந்தல் | 02. உடப்பு | காலை 10.00<br>பி.ப. 9.00 | மு.ப. 10.30 மணி<br>2025.05.20 | 1000.00 |
| முந்தல் | 03. முந்தல் | காலை 10.00<br>பி.ப. 9.00 | மு.ப. 10.30 மணி<br>2025.05.20 | 1000.00 |
| முந்தல் | 04. முக்குத்தொடுவாவ | காலை 10.00<br>பி.ப. 9.00 | மு.ப. 10.30 மணி<br>2025.05.20 | 1000.00 |

04- 80

## கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகையும்

## மாதம்பை பிரதேச செயலாளர் பிரிவு

கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2025 / 2026

2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

02. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைப்படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

03.கேள்விப்பத்திரங்கள் முறையாக முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு, 13 ஆம் இலக்க பம்பல கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் எனக்குறிப்பிடல் வேண்டும். 2025.05.16 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்பு மாதம்பே பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2025.05.16 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுதல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திரக் கோரிக்கையாளர்கள் மாதம்பே பிரதேச செயலகத்தில் சமுகமளித்து இருத்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் இடம்பெறாத கள்ளுத்தவறணை விற்பனையானது 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் இடம்பெறுவதுடன் இதற்கான கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி மேற்குறிப்பிட்டவாறு அமைதல் வேண்டும்.

07 இது தொடர்பான மேலதிக விபரங்கள் மாதம்பே பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (0322247728).

ஈ.எம்.பி.பி. ஏகநாயக,
பிரதேச செயலாளர்,
மாதம்பை.

பிரதேச செயலகம்,
மாதம்பை,
2025.04.01.

### அட்டவணை

| | *பிரிவு* | *கிராமம்* | *கேள்விப்பத்திரங்கள் ஏற்கும் இறுதி நேரமும் திகதியும்* | *கேள்விப்பத்திர வைப்புத் தொகை (ரூபா)* |
|---|---|---|---|---|
| 01 | மாதம்பே பிரதேச செயலாளர் பிரிவு | பம்பல | 2025.05.16 மு.ப. 10.30 மணிக்கு | 1000.00 |

04- 79

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**ஒன்றிணைத்தல் அறிவித்தல்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 244 (3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

அல்மாஸ் கெப்பிடல் ( பிரைவட்) லிமிட்டட் என்ற நிறுவனம் அல்மாஸ் ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் என்ற நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்

அல்மாஸ் ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் (கம்பனி இல.PV 1773) மற்றும் அல்மாஸ் கெப்பிடல் ( பிரைவட்) லிமிட்டட் (கம்பனி இல. PV 6208) ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 244(1) (அ) பிரிவின் நியதிகளின் கீழ் கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப 2025, மாச்சு 25 ஆந் திகதியன்று சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றதோடு மேலே குறிப்பிடப்பட்ட கம்பனிகள் அல்மாஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் எனத் தொடரும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

அல்மாஸ் ஹோல்டிங்ஸ் ( பிரைவட்) லிமிட்டட்.

04- 77

---

**பொது அறிவித்தல்**

**கம்பனியின் பெயர் மாற்றம்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பகுதி 9(2) இற்கமைவாக 2025.03.07 ஆந் திகதி முதல் பின்வரும் கம்பனி பெயர்மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

*கம்பனியின் பழைய பெயர்* : ஏசியா மெனேஜ்மண்ட் கன்சல்டன்சி ( பிரைவட்) லிமிட்டட்
*கம்பனி இல.* : PV 72701
*கம்பனி பதிவு அலுவலக முகவரி* : இல.377/2, மஹர, கடவத்தை
*கம்பனியின் புதிய பெயர்*: ஏசியா மெனேஜ்மண்ட் கெபிடல் வென்சர்ஸ் (பீவீடீ) எல்டீடி

எஸ்.எஸ். பி கோர்ப்பரேட் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிட்டட் .
செயலாளர்கள்.

04- 81

---

**ஒன்றிணைத்தல் அறிவித்தல்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

லீனா மெனுபெக்ச்சரிங் ( பீவிடீ) எல்டீடி உடன் லீனா ஸ்பிரோ (பிரைவட்) லிமிட்டட் என்ற நிறுவனத்தை ஒன்றிணைத்தல்

லீனா மெனுபெக்ச்சரிங் ( பீவிடீ) எல்டீடி (கம்பனி இலக்கம் பீவி 76003) மற்றும் லீனா ஸ்பிரோ (பிரைவட்) லிமிட்டட்(கம்பனி இலக்கம் பீவி 121896) ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 244(1) (அ) பிரிவின் நியதிகளின் கீழ் கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப 2025, ஏப்பிறல் 01 ஆந் திகதியன்று சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றதோடு மேலே குறிப்பிடப்பட்ட கம்பனிகள் லீனா மெனுபெக்ச்சரிங் (பீவிடீ) எல்டீடி எனத் தொடரும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

லீனா மெனுபெக்ச்சரிங் ( பீவிடீ) எல்டீடி.

04- 124

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது